212

# வலயக் கல்வி அலுவலகம் - கிளிநொச்சி

## மூன்றாம் தவணைப் பரீட்சை – 2020

| தரம் :08 | விஞ்ஞானம் | நேரம் : |
|---|---|---|
| | சுட்டெண் ........................................................................ | 2.00 மணி |

### பகுதி - I

❖ **மிகப்பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.**

01. நிறையுரு மாற்றத்தைக் காட்டும் விலங்கு.
1) மனிதன் 2) நுளம்பு 3) கரப்பான்பூச்சி 4) எலி

02. உணவு நற்காப்பு செய்வதில் பின்பற்றப்படும் நவீன முறை.
1) உப்பிடல் 2) புகையூட்டல் 3) குளிரூட்டல் 4) தேனிடல்

03. கசிவு நிகழும் தாவரக் கூட்டம்,
1) சேம்பு, உருளைக்கிழங்கு, அலரி
2) அந்தூரியம், தக்காளி, புல்
3) நாகதாளி, அலரி, உருளைக்கிழங்கு
4) பிள்ளைக்கற்றாளை, அலரி, பூசணி

04. வைரசு மூலம் பரவாத நோய் எது?
1) AIDS 2) தடிமன் 3) டெங்கு 4) மலேரியா

05. இரசாயன மாற்றமல்லாதது எது?
1) நீராவி ஒடுங்குதல்
2) மக்னீசியம் தகனமடைதல்
3) இரும்பு துருப்பிடித்தல்
4) உலோகம் மங்கலடைதல்

06. நீர்த்தாழியில் மைத்துளிகள் சிலவற்றை இட்டபோது மையின் நிறம் தாழியில் உள்ள நீர் முழுவதும் பரவியது. இவ் அவதானிப்பை தெளிவாக்கும் மிகப் பொருத்தமான விடை எது?
1)நீரின் தொடர்ச்சியற்ற தன்மை
2) மையின் தொடர்ச்சியற்ற தன்மை
3) நீர், மை ஆகியவற்றின் தொடர்ச்சியற்ற தன்மை
4) மை தொடர்ச்சியற்றது. நீர் தொடர்ச்சியானது

07. தூய நீரின் கொதி நிலை
1) $0^0c$ 2) $30^0c$ 3) $100^0c$ 4) $30^0c - 100^0c$

08. முள்ளந்தண்டிலிகளில் அடங்காத விலங்குக் கூட்டம்
1) அனலிடா 2) நிடாரியா 3) அம்பிபியா 4) ஆந்திரப்போடா

09. கடத்திக் கம்பிகளினூடாக பாயும் மின்னோட்டத்தைக் குறைக்கும்போது அக் கடத்தியில் தோன்றும் காந்தப் புலமானது
1)வலிமை கூடியதாகும்
2) வலிமை குறைந்ததாகும்
3) வலிமை குறைந்து மீண்டும் அதிகரிக்கும்
4) வலிமையில் மாற்றம் ஏற்படாது.

10. உரோமங்களால் போர்த்தப்பட்ட தோலைக் கொண்டதும் முலைச் சுரப்பிகளைக் கொண்டதுமான விலங்குக் கூட்டம்
1) பிஸெஸ் 2) அனலிடா 3) மமேலியா 4) ரெப்ரீலியா



kalvi.lk

11. மனிதனில் எத்தனை சோடி முண்ணான் நரம்புகள் காணப்படுகின்றன.
1) 12 சோடி 2) 21 சோடி 3) 13 சோடி 4) 31 சோடி

12. கீழே குறிப்பிட்ட வளர்ச்சிப் பருவங்களில் நுளம்பின் வாழ்க்கைச் சக்கரத்தில் காணப்படாத பருவம் எது?
1) முட்டை 2) குடம்பி 3) அணங்கு 4) நிறையுடலி

13. வறட்சி ஏற்படுவதற்கான இயற்கைக் காரணியாக **அமையாதது** எது?
1) முறையற்ற விதத்தில் மண்ணைப் பயன்படுத்துதல்
2) உலர் காற்றோட்டம்
3) எல்டினோ தோற்றப்பாடு
4) உரியகாலத்தில் பருவக்காற்றுக்கிடைக்காமை

14. சிரியஸ் எவ் உடுத்தொகுதியில் அமைந்துள்ளது.
1) இடபம் 2) பெருநாய் 3) பெருங்கரடி 4) ஓராயன்

15. அயடீன் கரைசலின் நிறம்
1) செங்கபிலம் 2) நீலம் 3) கறுப்பு 4) நிறமற்றது

16. தோலின் ஆரோக்கியத்திற்கு அவசியமான விற்றமின்கள் எவை?
1) விற்றமின் A,B 2) விற்றமின் B,C 3) விற்றமின் A,E 4) விற்றமின் D,E

17. சூரியன் தொடர்பான **தவறான** கூற்றைத் தெரிவு செய்க.
1) மிகப்பெரிய உடுவாகும்.
2) ஒளிச்சக்தியை வெளிவிடும்
3) கோள்கள் அதனைச் சுற்றி வருகின்றன.
4) புவியிலிருந்து 150 மில்லியன் கிலோமீற்றர் தூரத்தில் அமைந்துள்ளது.

Education கல்வி අධ්‍යාපන

18. இலைகளில் தொகுக்கப்படும் குளுக்கோசு ஆனது எவ்வடிவில் சேமிக்கப்படுகிறது.
1) மாப்பொருள் 2) சுக்குரோசு 3) மோல்ரோசு 4) கலக்ரோசு

19. வாற்பேய்களின் சுவாச அங்கம்
1) தோல் 2) பூக்கள் 3) நுரையீரல் 4) வாய்க்குழி

20. இலைகளில் நீரைச் சேமிக்கும் தாவரம்
1) கற்றாளை 2) வெங்காயம் 3) பெகோனியா 4) கரட்

(20×1 = 20 புள்ளிகள்)

**02. பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து தேர்ந்தெடுத்து இடைவெளி நிரப்புக.**
**(ஒலிமுதல், சடப்பொருள், அழுகலடைதல், பீடை, உறைதல், எரிபற்றுநிலை, ஓமோன்கள், ஒட்சிசன், மூலகங்கள், வெள்ளி)**

01. வெளியில் இடத்தை எடுப்பதுடன் திணிவையும் கொண்டுள்ள பொருட்கள்......................... எனப்படும்.

02. புரதம் அதிகம் கொண்ட உணவுகளின் மீது நுண்ணங்கிகளின் தொழிற்பாடு காரணமாக ஏற்படும் மாற்றம் ......................................................................... என அழைக்கப்படும்.


03. மனிதனுக்குப் பயன்படும் பயிர்களுக்கும் விளைச்சல்களுக்கும் பாதிப்பை ஏற்படுத்தும் அங்கிகள்................................................................................... ஆகும்.

04. ஒலியைப் பிறப்பிக்கும் பொருட்கள்.................................................................................... எனப்படும்.



kalvi.lk

**B)** 1) உயிர்க்கலங்களிலுள் நடைபெறும் இரசாயனத் தொழிற்பாடுகளின் மூலம் உண்டாகும் கழிவுப் பதார்த்தங்கள் உடலிலிருந்து வெளியேற்றப்படும் செயன்முறை கழிவகற்றல் எனப்படும்.




1) A, B, C மற்றும் E ஐ இனங்காண்க.

A. ..............................................

B. ..............................................


C. ..............................................


E. ..............................................  (4×½ = 02 புள்ளிகள்)


2) எவ் உப்புகள் சிறுநீரகங்களில் படிவதனால் சிறுநீரகக் கற்கள் தோன்றுகின்றன.

(01 புள்ளி)

**C)** எமது காதுகளுக்கு இனிமையான சந்தவமைவுடன் இசைக்கப்படும் ஒலி இசை எனப்படும்.


A


B


C


1) தரப்பட்ட இசைக்கருவிகளின் வகைகளைக் குறிப்பிடுக.

A. ..............................................

C. ..............................................  (02 புள்ளிகள்)

2) இசைக்கருவி B யில் ஒலி எவ்வாறு பிறப்பிக்கப்படுகிறது?  (01 புள்ளி)

**D)** பதார்த்தமொன்றின் உருகு நிலையைத் துணிவதன் மூலம் அதன் தூய்மையைத் தீர்மானிக்க முடியும்.




1) A, B யைப் பெயரிடுக.  (01 புள்ளி)

2) உருகுநிலை என்றால் என்ன?  (02 புள்ளிகள்)

3) இப்பரிசோதனையின் போது பெறப்படும் அவதானம் யாது?  (01 புள்ளி)



kalvi.lk

Education
கல்வி
අධ්‍යාපන

kalvi.lk

# GRADE 6,7,8

# STUDY WITH US..!

# SCIENCE

## ONLINE CLASSES

இலங்கை முழுவதும் உள்ள மாணவர்களை இணைத்து Zoom செயலி மூலமாக
இணைய வழியில் நடைபெறும் கணித பாட வகுப்புகள்.

✅ மாறாத நேர அட்டவணையுடனான வகுப்புகள்.
✅ மாணவர்களின் அடைவு மட்டத்தை உயர்த்த தொடர்ச்சியான பரீட்சைகள்.
✅ பயிற்சி செயலட்டைகள் pdf வடிவில் வழங்கப்படும்.

**TAMIL MEDIUM**

850/= Monthly

**ENGLISH MEDIUM**

1000/= Monthly

Whatsapp ஊடாக எம்மை தொடர்பு கொண்டு வகுப்புகள்
தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள முடியும்.

**075 287 1457**

தினமும் வகுப்பு RECORDING வழங்கப்படும்.



கல்வி
Digital Learning Platform

www.kalvi.lk

Education கல்வி අධ්‍යාපන

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page